கொடுக்கப்பட்ட சொற்களை வரிசைப்படுத்தி செய்யுளின் அடிகளை சரியாக வரிசைப்படுத்தவும்.

நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை

அல்லார் எனினும் அடக்கிக்கொளல் வேண்டும்

புல்லிதழ் பூவிற்கும் உண்டு.

நெல்லுக்கு உமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு

அவற்றை மனத்திலேயே அடக்கி வைத்துக் கொள்ளவேண்டும்.

நல்லவர் என ஒருவரை நாம் நினைத்து அதிக அன்புடன் உறவாடிப் பழகிய பின்னர், அவர் நல்லவராக இல்லாவிடினும் அவருடைய குற்றங்குறைகளைப் பிறரிடம் கூறக்கூடாது.

ஏனெனில், நெல்லுக்கும் அதன் உமி குறையாக உண்டு. நீருக்கும் நுரை குறையாக உள்ளது. சிறப்புப் பெற்ற மலருக்கும் கூட அதன்மேல் உள்ள புற இதழ் குறையாக உள்ளது.

ஒருவருடைய குற்றங்குறைகளைப் பெரிதுபடுத்தக்கூடாது.

LIVEWORKSHEETS